# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

## முதலாம் ஆண்டு

## தமிழ் (மொழி)

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 75**

**பகுதி — அ** **(10 × 1 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. ஏழாம் திருமுறையைப் பாடியவர் யார்?
2. முதல் திருவந்தாதியைப் பாடிய ஆழ்வார் பெயரினைக் குறிப்பிடுக.
3. சீறாப்புராணத்தின் நூலமைப்பினைத் தருக.
4. தேம்பாவணி யாருடைய வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கிறது.
5. மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார்?
6. கலம்பகத்தில் எத்தனை உறுப்புகள் இடம்பெற்றுள்ளன?
7. தமிழ்ப் புதுக்கவிதைக்கு வித்திட்டவர் யார்?
8. ‘வானம்பாடி’ கவிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக.
9. சாகித்ய அகாதெமி விருதுபெற்ற பாரதிதாசனின் படைப்பு எது?
10. ஔவச்செய்தி நூலின் ஆசிரியர் யார்?
11. உரைநடையின் தந்தை என்றழைக்கப்படுபவர் யார்?
12. தமிழ், செம்மொழி என்பதற்கு உறுதுணையாய் நின்ற நூல்களின் எண்ணிக்கை யாது?
13. குலோத்துங்கன் என்ற புனைபெயரில் கவிதை எழுதிய அறிவியல் கவிஞர் யார்?
14. ‘நான், நாளை சென்று வந்தேன்’ - பிழையைக் கண்டறிந்து திருத்தியெழுதுக.
15. பெண் நாயன்மார் ஒருவரைக் குறிப்பிடுக.

**பகுதி — ஆ** **(5 × 2 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. காரைக்காலம்மையாரின் நூல்களைக் குறிப்பிடுக.

17. தேம்பாவணியின் நூலமைப்பினை எடுத்தெழுதுக.

18. பெரியாழ்வார் - குறிப்பு வரைக.

19. நந்திக்கலம்பகம் - வரையறை செய்க.

20. வா.செ.குழந்தைசாமி - அறிமுகப்படுத்துக.

21. பிழை நீக்கி எழுதுக:-
கடற்கறையோறம் வாழ்ந்த மீணவ மக்களின் குடியிருப்புகல் கடற்கோளாள் பாதிக்கப்பட்டது.

22. ஐக்கூ கவிதை ஒன்றை எழுதுக.

**பகுதி — இ** **(5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு பக்க அளவில் விடை தருக.**

23. முத்தொள்ளாயிரம் மூவேந்தரின் வரலாற்றுச் சிறப்பினை எடுத்துரைக்கும் நூல் என்பதனை நிறுவுக.

24. உரையாசிரியர்கள் மூவர் குறித்தெழுதுக.

25. மு.வ.வின் ‘தமிழுக்கு முதல் இடம்’ - தரும் பொருண்மையினை எடுத்துரைக்க.

26. ஆண்டாளின் படைப்புச் சிறப்பினைப் புலப்படுத்துக.

27. ‘அமைதி’ நாடகம் எடுத்துரைக்கும் செய்தியினை விவரிக்க

28. தேம்பாவணி (அ) சீறாப்புராணத்தின் சிறப்பினைப் புலப்படுத்துக.

29. பிறமொழிச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுக.

அ) கம்ப்யூட்டரில் டைப் செய்ய இயலவில்லை.

ஆ) பந்த் அறிவிக்கப்பட்டதால் ரோடில் பஸ்கள் ஓடவில்லை.

இ) மக்கள் சமுத்திரமாய்த் திரண்டனர்.

ஈ) இந்த வருஷம் மழை பெய்ததால் பஞ்சமில்லை.

**பகுதி — ஈ** **(3 × 10 = 30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடை தருக.**

30. பன்னிரு திருமுறைகள்வழி அறியலாகும் சமூகச் சிந்தனைகளைத் தொகுத்துரைக்க.

31. ஜெயகாந்தனின் 'நான் இருக்கிறேன்' - சிறுகதையைத் திறனாய்வு செய்க.

32. சிற்றிலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சியினைத் தெளிவுபடுத்துக.

33. மரபுக்கவிதை – புதுக்கவிதை தன்மைகளையும் சிறப்புகளையும் ஆய்ந்துரைக்க.

34. கொரோனா பெருந்தொற்று குறித்தாய்க.

| UG-A-127 | BFTM-11 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

## FIRST YEAR

### தமிழ் (மொழி)

**காலம் : மூன்று மணி** **மதிப்பெண்கள் : 70**

**பகுதி — அ** **(3 × 3 = 9 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடை தருக.**

1. பன்னிரு திருமுறைகள் என்றால் என்ன? விளக்குக.
2. கலம்பகம் - என்றால் என்ன? காட்டுகள் தருக.
3. உரைநடை என்றால் என்ன? உரைநடையில் அமைந்த இலக்கியத்திற்குச் சான்றுகள் தருக.
4. டாக்டர் கால்டுவெல் குறித்து எழுதுக.
5. மொழித்திறன் என்றால் என்ன? சான்றுகள் தருக.

**பகுதி — ஆ** **(3 × 7 = 21 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.**

6. திருநாவுக்கரசர் தேவாரம் குறித்து விளக்கி எழுதுக.
7. சிற்றிலக்கியம் என்றால் என்ன? விளக்குக.
8. தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சி குறித்து எழுதுக.
9. உரைநூல்கள் என்பன எவை? அவற்றின் பயன்கள் யாவை?.
10. அலுவலக மடல்கள் என்றால் என்ன? சான்றுகள் காட்டுக.

**பகுதி — இ (4 × 10 = 40 மதிப்பெண்கள்)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.**

11. நாலாயிரத் திவ்ய பிரபந்தங்கள் பற்றிக் கட்டுரை வரைக.

12. முத்தொள்ளாயிரம் வழி புலப்படும் சோழனின் யானை மறம் பற்றி விளக்குக.

13. பாரதிதாசனின் அமைதி நாடகத்தின் கதையமைப்பினை ஆராய்க.

14. தமிழில் சமய இலக்கியங்கள் குறித்து விவரிக்க.

15. கடிதங்களின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்கி வரைக.

16. தமிழ்க் கவிதை இலக்கியங்கள் பற்றி விளக்கி வரைக.

17. சொல் முதல், இறுதி எழுத்து மரபுகள் குறித்து காட்டுகளுடன் விளக்கி எழுதுக.

| UG-A-131 | BFTM-21 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – JUNE 2021

**இரண்டாம் ஆண்டு**

**தமிழ் (மொழி)**

காலம் : மூன்று மணி　　　　　　　　　　　　　　　மதிப்பெண்கள் : 75

**பகுதி — அ　　　　　　(10 × 1 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.**

1. எட்டுத்தொகை நூல்களில் புறம் சார்ந்த நூல்கள் யாவை?
2. 'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' எனப் பாடியவர் யார்?
3. அன்பின் ஐந்திணைகள் யாவை?
4. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் எத்தனை?
5. இனியவை நாற்பதின் ஆசிரியர் யார்?
6. தாளாளன், வேளாளன், கோளாளன் ஆகிய மூவரைப் பற்றிக் குறிப்பிடும் நூல் எது?
7. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உறுதிப்பொருள்கள் யாவை?
8. 'பசிப்பிணி என்னும் பாவி'-எனக் குறிப்பிடும் காப்பியம் எது?
9. 'அண்ணல் வனம் ஏகுதலும் எம்தம் உயிர் வீகுதலும் இறையும் தவறா' என்றவர் யார்?
10. முதல் சங்கம் நிறுவப்பட்ட இடம் எது?
11. திவிட்டன், உலக இன்பம் துறந்து, துறவு மேற்கொண்டு முக்திப்பெற்றலைக் கூறும் காப்பியம் எது?
12. நன்னூலின் ஆசிரியர் யார்?
13. ஐக்கூவின் வடிவம் குறித்து எழுதுக.
14. ஓரங்க நாடகம் என்றால் என்ன?
15. 'மயில் கூவ குயில் அகவ காகம் கத்தியது' –மரபு வழுக்களைத் திருத்தம் செய்க.

**பகுதி — ஆ　　　　　　(5 × 2 = 10 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக.**

16. 'நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்'- பதவுரை எழுதுக.
17. நெடுநல்வாடை- சிறுகுறிப்புத் தருக.
18. 'கல்வி அழகே அழகு'- நாலடியார் வழி விளக்கம் தருக.

19. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?

20. சாலி பெற்ற மகன் யார்? விளக்கம் தருக.

21. ஐஞ்சிறுங்காப்பியங்கள் யாவை?

22. ஓரங்க நாடகத்தின் படிநிலைகள் யாவை?

**பகுதி — இ** **(5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க விடை தருக.**

23. 'உண்ணு நீர் விக்கினான் என்றேனோ' எனத் தலைவி தோழிக்கு உரைத்த செய்தி யாது? விளக்கம் தருக.

24. பாசறையில் தலைவன் வீற்றிருந்தலை, நெடுநல்வாடை எவ்வாறு குறிப்பிடுகிறது?

25. 'இறைதோறும் ஊறும் கிணறு'- விளக்குக.

26. 'மீன்சூழ்மாமதிபோல சீவகன்'- விளக்கம் தருக.

27. 'நின்பிரிவினுங் சுடுமோ பெருங்காடு'- யார் கூற்று? விளக்குக.

28. சமணர் அளித்த இலக்கண நூல்கள் யாவை?

29. ஐக்கூக் கவிதைகளில் இயற்கை - விளக்குக.

**பகுதி — ஈ** **(3 × 10 = 30 மதிப்பெண்கள்)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை தருக.**

30. உலக வாழ்வின் உண்மைகளை, பூங்குன்றனார் பாடல் வழி விளக்குக.

31. திருக்குறள் அறிவுறுத்தும் அறங்கள் யாவை? விளக்குக.

32. ஆபுத்திரனின் கதையினை விவரிக்க.

33. ஆற்றுப்படை நூல்களை விவரிக்க.

34. சிறந்த சொற்பொழிவாளரின் பண்புகள் யாவை? விளக்குக.